25890

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

61 | T | I, II

| வினாத்தாள் | புள்ளிகள் |
| --- | --- |
| I | |
| பரீட்சகர் 1 | |
| பரீட்சகர் 2 | |
| EMF | |

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

භූගෝල විද්‍යාව I, II
புவியியல் I, II
Geography I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## புவியியல் I

சுட்டெண் : ..............................

**அறிவுறுத்தல்கள் :**

✳ இவ்வினாத்தாள் **40** வினாக்களைக் கொண்டது.

✳ ஒவ்வொரு வினாவுக்கும் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

● **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**1.** புவியின் வளிமண்டலச் சேர்க்கையின்படி அதில் அதிகளவில் அடங்கியிருக்கும் வாயு.............................. ஆகும்.
(காபனீரொட்சைட் / ஒட்சிசன் / நைதரசன்)

**2.** புவியின் நீர்ப் பரம்பலின்படி ஆறுகள், அருவிகள், ஏரிகள் மற்றும் நீர்த்தேக்கங்கள் கொண்டிருக்கும் நீர் .............................. நீர் என அழைக்கப்படும்.
(மேற்பரப்பு / தரை / மண்)

**3.** உலகின் வருடாந்த காரீய உற்பத்தியில் சுமார் 60% இனை .............................. உற்பத்தி செய்கின்றது.
(இலங்கை / மடகஸ்கார் / இந்தியா)

**4.** இலங்கையின் கடும் பாதுகாப்பிற்கு உட்பட்ட இயற்கை ஒதுக்கிடமாக .............................. கருதப்படுகிறது.
(சிங்கராஜா / யால / வில்பத்து)

**5.** உலகின் மொத்த நிலப்பரப்பில் சுமார் .............................. குறைந்தளவான மக்கள் தொகையைக் கொண்டுள்ளது.
(25% / 65% / 75%)

● **6** தொடக்கம் **10** வரையுள்ள ஒவ்வொரு கூற்றையும் வாசித்து அவை சரியாயின் **'ச'** ஐயும், பிழையாயின் **'பி'** ஐயும் சுற்றி வட்டம் வரைக.

**6.** பப்புவா நியூகினியா மற்றும் தஸ்மேனியா ஆகிய தீவுகள் அவுஸ்ரேலியாவின் கண்டமேடையில் அமைந்துள்ளன. ச / பி

**7.** ஆசியாவுக்கு வெளியிலுள்ள ஒரு நெற் பயிர்ச்செய்கைப் பகுதியான 'சக்கிரமன்ரோ' ஆற்றுப் பள்ளத்தாக்கு அவுஸ்திரேலியாவில் அமைந்துள்ளது. ச / பி

**8.** போட்டிச் சந்தையில் விளம்பரங்களுக்கு ஏற்படும் செலவு காரணமாக உற்பத்தியாளர்களால், தயாரிக்கப்பட்ட பொருட்களின் விலைகளைக் குறைந்த மட்டத்தில் வைத்திருக்க முடிகின்றது. ச / பி

**9.** இலங்கையில் பீங்கான் களி தொடர்புடைய உற்பத்திகளின் உள்நாட்டுச் சந்தைப்படுத்தல் மூலம் உயர்ந்தளவான வருமானம் பீங்கான் ஓடுகள் மற்றும் சுகாதாரப் பொருட் தொகுதிகளின் விற்பனையிலிருந்து பெறப்படுகின்றது. ச / பி

**10.** நிலச்சரிவுகள் மற்றும் வெள்ளப்பெருக்குகள் போன்ற இயற்கை இடர்களை மானிட நடவடிக்கைகளினால் அதிகரிக்கப்படும் இடர்களாக இனங் காணமுடிகின்றது. ச / பி

● **11** தொடக்கம் **16** வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

**11.** இலங்கையில் உயர் நிலங்களில் நெற் பயிர்ச்செய்கை .................................... பயிரச்செய்கை முறையைப் பின்பற்றி மேற்கொள்ளப்படுகின்றது.

[பக். 2 ஐப் பார்க்க

12. இலங்கையின் கைத்தொழில் துறையின் ஏற்றுமதிகளில் உயர்ந்தளவான அந்நியச் செலாவணி .................................. ஏற்றுமதியிலிருந்தே பெறப்படுகின்றது.

13. இலங்கையின் விவசாயம், கைத்தொழில், சேவைகள் ஆகிய மூன்று துறைகளில் அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர் படையினர் வேலைவாய்ப்பைப் பெற்றிருப்பது .................................. துறையிலாகும்.


14. புவியின் உட்பாகத்தில் ஏற்படும் மக்மாவின் குளிர்ச்சி மற்றும் திண்மமாதல் காரணமாக .................................. தீப்பாறைகள் உருவாக்கப்படுகின்றன.

15. வடக்கு அந்திலாந்திக் சமுத்திரப் பிரதேசத்தில் தோன்றும் சூறாவளிகள் .................................. என அழைக்கப்படும்.

16. ஆறு ஒன்று .................................. சாய்வின் வழியாகப் பாயும்போது நீர்வீழ்ச்சி உருவாகின்றது.

- பின்வரும் வரைபினைப் பயன்படுத்தி **17** தொடக்கம் **19** வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

**இலங்கையின் குடித்தொகையும் சராசரி வளர்ச்சி வீதமும் - தொகை மதிப்பு வருடங்கள் 1871-2024**




17. குடித்தொகை அண்ணளவாக 15 மில்லியனாக ........................ தொகைமதிப்பு வருடத்திலேயே அதிகரித்திருந்தது.

18. குடித்தொகை வளர்ச்சி வீதத்தின் அதிகூடிய அளவு ........................ தொகை மதிப்பு வருடத்தில் காணப்படுகின்றது.

19. அண்மைக் காலத்தில் குடித்தொகை வளர்ச்சி வீதத்தின் குறிப்பிடத்தக்க அம்சமாகக் காணப்படுவது அதன் விரைவான .......................................... ஆகும்.

- **20** தொடக்கம் **24** வரையுள்ள வினாக்களில் **'அ'** , **'ஆ'** என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. **'அ'** நிரலிலுள்ள தகவல்களின் ஒழுங்கிற்கேற்ப **'ஆ'** நிரலிலுள்ள தகவல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளமையைக் காட்டும் சரியான விடைக்குரிய **இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

20.

| 'அ' மலைத் தொடர் | 'ஆ' அமைந்துள்ள கண்டம் |
|---|---|
| 1. பாரிய பிரிப்புத் தொடர் | A - ஆசியா |
| 2. அற்லஸ் மலைத்தொடர் | B - தென் அமெரிக்கா |
| 3. அந்திஸ் மலைத்தொடர் | C - ஆபிரிக்கா |
| | D - அவுஸ்திரேலியா |

(1) A, B, C (2) B, C, D (3) C, D, A (4) D, C, B (......)

21.

| 'அ' இரும்புருக்கு உற்பத்தி மையங்கள் | 'ஆ' அமைந்துள்ள நாடு |
|---|---|
| 1. தெற்கு மஞ்சூரியா | A - ஐக்கிய அமெரிக்கா |
| 2. பேர்மிங்காம் | B - ஐக்கிய இராச்சியம் |
| 3. பிற்ஸ்பேர்க் | C - சீனா |
| | D - இந்தியா |

(1) A, B, C (2) B, C, D (3) C, B, A (4) D, C, B (......)

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**22.**

| 'அ' பரம்பியுள்ள பகுதி | 'ஆ' கனிய வகை |
|---|---|
| 1. போகல | A - இல்மனைற்று |
| 2. பொரலஸ்கமுவ | B - காரீயம் |
| 3. எலஹெர | C - வெண்களி |
| | D - இரத்தினக்கற்கள் |

(1) A, B, C (2) B, C, D (3) C, B, D (4) D, B, A (……)

**23.**

| 'அ' பாறை வகை | 'ஆ' பயன்பாடுகள் |
|---|---|
| 1. பளிங்கடுக்குப்பாறை | A - கட்டடங்கள், பெருவீதிகளை அமைத்தல், சிற்பங்களைச் செதுக்குதல் |
| 2. தொலமைற்று | B - உர உற்பத்தி, சுண்ணாம்பு உற்பத்தி |
| 3. மயோசீன் சுண்ணக்கற்கள் | C - சீமெந்து உற்பத்தி, இரும்பு படிவுகளை உருக்குதல் |
| | D - பீங்கான் ஓடுகளின் உற்பத்தி |

(1) A, B, C (2) B, C, D (3) C, D, B (4) D, A, B (……)

**24.**

| 'அ' காட்டுவகை | 'ஆ' விசேட அம்சங்கள் |
|---|---|
| 1. அயன ஈர | A - மரங்களின் உச்சிகள் விதானத்தைக் கொண்டிருக்கும். சப்பு, கீனா, காட்டு ஈரப்பலா போன்ற மரங்கள் அதிகம். |
| 2. வரண்ட என்றும் பசுமையான கலப்பு | B - வரட்சியைத் தாங்கும் தாவரங்கள் அதிகம். பலு, வீரை, எரமினியா, கரம்பை போன்ற மரங்கள் அதிகம் |
| 3. முட் புதர்களும் பற்றை நிலங்களும் | C - பல விதானங்கள், அடர்த்தியான கீழ் வளரிகளைக் கொண்டிருக்கும். கரும் பச்சை நிறக் காடுகள் |
| | D - வரண்ட காலத்தில் இலையுதிர்வு, மழைப் பருவத்தில் தாவரங்களின் வளர்ச்சி. கருங்காலி, மில்ல, தேக்கு மரங்கள் அதிகம் |

(1) A, B, C (2) B, C, D (3) C, D, B (4) D, A, C (……)

- **25** தொடக்கம் **37** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள தெரிவுகளிலிருந்து **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்து, அதனைக் குறித்து நிற்கும் **இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**25.** ஆசியாவில் நெற் பயிர்ச்செய்கைப் பிரதேசங்கள் பற்றிய சரியான கூற்றினைத் தெரிவுசெய்க.
(1) பெரும்பாலான ஆசிய நாடுகளில் தொழிலாளர்-செறிவு கொண்ட பயிர்ச்செய்கையாக நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது.
(2) ஆசிய நாடுகளில் வர்த்தக மட்டத்தில் பாரிய தோட்டங்களில் நெல் பயிரிடப்படுகிறது.
(3) ஆசிய நாடுகளில் நெற் பயிர்ச்செய்கை முழுமையாக இயந்திரமயமாக்கப்பட்டுள்ளது.
(4) ஆசிய நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் நெல்லுக்கு உலகம் பூராகவும் பரவலாகச் சந்தை காணப்படுகிறது. (……)

**26.** தாழ்நிலத் தேயிலை பயிரிடப்படும் மாவட்டம்
(1) கேகாலை (2) மாத்தளை (3) கண்டி (4) மொனராகலை (……)

**27.** இலங்கையில் பாற்பண்ணைத் தொழிலை விருத்தி செய்வதற்கு உதவும் வகையில் பால் தரும் மாடுகளின் பரிமாற்ற நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடம் யாது?
(1) அம்பேவல (2) கன்னன்வில (3) வால்பிட்ட (4) மீவனபலன (……)

**28.** இறப்பர் பயிர்ச்செய்கைக்கு மிகவும் பொருத்தமான மண் வகை யாது?
(1) செங்கபில மண் (2) செம்மஞ்சள் லட்டோசோல் மண்
(3) செம்பூரான்கலந்த மண் (4) சுண்ணநீற்றுச் சார்பற்ற கபிலமண் (……)

[பக். 4 ஐப் பார்க்க

**29.** இலங்கையில் வர்த்தகப் பயிர்ச் செய்கைக்காக பாரிய அளவு நிலம் பின்வருவனவற்றுள் எதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது?
(1) தேயிலை (2) இறப்பர்
(3) தெங்கு (4) சிறு ஏற்றுமதிப் பயிர் (……)

**30.** உலகில் மின்னியல் உபகரணங்களின் உற்பத்தியில் தற்போது முன்னணி நிலைக்கு மாறியுள்ள நாடு
(1) ஜப்பான் (2) சீனா (3) இந்தியா (4) தென் கொரியா (……)

**31.** பின்வருவனவற்றில் இலங்கையில் நீர் மின்சக்தி நிலையங்கள் மற்றும் அவற்றுடன் இணைந்து காணப்படும் ஆறுகளை எடுத்துக்காட்டும் **பொருத்தமற்ற** சோடியைத் தெரிவுசெய்க.
(1) சமனலவெவ - வளவை கங்கை (2) கனியோன் - களுகங்கை
(3) கொத்மலை - மகாவலி கங்கை (4) இங்கினியாகல - கல்ஓயா (……)

**32.** உலக நாடுகளில் உயர்ந்த குடித்தொகை வளர்ச்சி வீதத்தையும் குறைந்த குடித்தொகை வளர்ச்சி வீதத்தையும் கொண்ட நாடுகளை ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) இந்தியா மற்றும் ரஷியா (2) பங்களாதேஷ் மற்றும் ஐக்கிய அமெரிக்கா
(3) பாகிஸ்தான் மற்றும் சீனா (4) நைஜீரியா மற்றும் ஜப்பான் (……)

**33.** பின்வருவனவற்றுள் உலகின் தற்போதைய குடித்தொகை பற்றிய சரியான கூற்று யாது?
(1) உலகின் மொத்தக் குடித்தொகை எட்டு பில்லியனுக்கு அதிகமாகும்.
(2) மிக அதிகளவான குடித்தொகையினர் வாழும் நாடு சீனாவாகும்.
(3) அபிவிருத்தியடைந்த நாடுகளில் குடித்தொகை வளர்ச்சி வீதம் உயர்வாகக் காணப்படுகின்றது.
(4) மிக உயர்ந்தளவான குடித்தொகையினர் வாழும் கண்டம் ஐரோப்பாவாகும். (……)

**34.** மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணின்படி இலங்கை எந்த நாடுகளின் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளது?
(1) மிக உயர்ந்த மானிட அபிவிருத்தி கொண்ட நாடுகள்
(2) உயர்ந்த மானிட அபிவிருத்தி கொண்ட நாடுகள்
(3) நடுத்தர மானிட அபிவிருத்தி கொண்ட நாடுகள்
(4) குறைந்த மானிட அபிவிருத்தி கொண்ட நாடுகள் (……)

**35.** பின்வரும் எந்தக் காலப் பகுதியில் இலங்கை மின்னல் இடர்களினால் அதிகளவில் பாதிக்கப்படுகின்றது?
(1) சூறாவளி-மழைக்காலம் (2) தென்மேல் பருவக்காற்று மழைக்காலம்
(3) வடகீழ் பருவக்காற்று மழைக்காலம் (4) இடைப் பருவக்காற்று மழைக்காலம் (……)

**36.** காலநிலை மாற்றத்தை ஏற்படுத்தும் அடிப்படைக் காரணி
(1) பூகோளக் காற்றுப் பாங்கில் ஏற்படும் மாற்றங்கள்
(2) பச்சைவீட்டு தாக்கம்
(3) சூரியப் புள்ளிகளின் நிகழ்வு
(4) பூகோள வெப்பநிலையில் ஏற்படும் அதிகரிப்பு (……)

**37.** நாடொன்றின் இனம், சமயம், ஏற்றுமதிகள் ஆகியவற்றின் சேர்க்கையை எடுத்துக்காட்டும் தரவுகளை முன்வைப்பதற்கு மிகவும் பொருத்தமான வரைபு முறை
(1) பிரிக்கப்பட்ட வட்ட வரைபு (2) எளிய பார் வரைபு
(3) இரட்டை பார் வரைபு (4) பல் பார் வரைபு (……)

● **A, B, C, D** ஆகியவற்றில் தரப்பட்டுள்ள ஒன்றுடனொன்று தொடர்புடைய தலைப்புக்களின் சோடிகளை நன்கு அவதானித்து, **38** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

**A** - 1. நகரமயமாக்கம்
2. சூழலியல் பிரச்சினைகள்

**B** - 1. சூறாவளிச் செயற்பாடு
2. காலநிலை மாற்றம்

**C** - 1. சமனற்ற குடித்தொகைப் பரம்பல்
2. உட்கட்டமைப்பு வசதிகள்

**D** - 1. இள வயதுக் குடித்தொகை
2. தொழிலாளர் படை

**38.** முதலாவதுடன் தொடர்புடைய பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கு இரண்டாவதில் ஏற்படும் வளர்ச்சி காரணமாகும் எனக் கருதத்தக்க தலைப்புச் சோடி யாது?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D** (……)

**39.** இரண்டாவதுடன் தொடர்புடைய பிரச்சினைகளை உருவாக்குவதற்கு முதலாவதில் ஏற்படும் வீழ்ச்சி காரணமாகும் எனக் குறிப்பிடத்தக்க தலைப்புச் சோடி யாது?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D** (……)

**40.** முதலாவதில் ஏற்படும் வளர்ச்சியானது இரண்டாவதிலும் கூட வளர்ச்சியை ஏற்படுத்தும் எனக் கருதத்தக்க தலைப்புச் சோடி யாது?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D** (……)

[பக். 5 ஐப் பார்க்க

✻ ✻

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

61 T I, II

25879

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

භූගෝල විද්‍යාව I, II
புவியியல் I, II
Geography I, II

உත්තර පත්‍ර පරීක්ෂකවරුන්ගේ ප්‍රයෝජනය සඳහා

## புவியியல் II

※ இவ்வினாத்தாள் **I, II** என்னும் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.

※ பகுதி **I** இலுள்ள வினா **01** கட்டாயமானது. அதில் (அ), (ஆ), (இ) ஆகிய **மூன்று** பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.

※ பகுதி **II** இலிருந்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

※ எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

## பகுதி I

**1.** (அ) உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கையின் 1:50, 000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் பகுதியை நன்கு அவதானித்து, அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினைப் (பக்க இல. **8**) பயன்படுத்துக.

- (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.

(i) படத்தில் திசைகளைக் காட்டும் அடைப்புக்குள் Ⓐ எழுத்தினால் குறித்துக்காட்டப்படும் திசை யாது? (உண்மை வடக்கு / நெய்யரி வடக்கு / காந்த வடக்கு) (01 புள்ளி)

(ii) உள்ளக எல்லையின் நீள்வரிப் பகுதியில் Ⓑ எழுத்தினால் காட்டப்படும் புள்ளிவிவரப் பெறுமானம் எது? (அகலக்கோடு / நெடுங்கோடு / ஆள்கூறு) (01 புள்ளி)

(iii) Ⓒ அமைவிடத்தில் எந்த நிலத்தோற்ற அம்சத்தினூடாக A09 பெருவீதி செல்கின்றது? (நீர்க் கணவாய் / பாறைத்தொடர் / சரிவுப்பாறை) (01 புள்ளி)

(iv) Ⓓ எழுத்தினால் குறித்துக்காட்டப்படும் நிர்வாக எல்லை யாது? (பிரதேச செயலகம் / மாவட்டம் / மாகாணம்) (01 புள்ளி)

(v) Ⓟ எழுத்தினால் எடுத்துக்காட்டப்படும் சதுரத்திலுள்ள நிலப் பகுதியின் பரப்பு யாது? ($01km^2$ / $01.5km^2$ / $02\ km^2$) (01 புள்ளி)

(vi) Ⓟ எழுத்தினால் குறித்துக்காட்டப்பட்டுள்ள பகுதியில் அமைந்துள்ள நியமக் குறியீடுகளால் எடுத்துக்காட்டப்பட்டுள்ள பொதுச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

- படப் பகுதி பற்றிய மூன்று கூற்றுகள், (vii), (viii), (ix) ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ளன. அவை சரியாக இருந்தால் **'ச'** எனவும் பிழையாக இருந்தால் **'பி'** எனவும் விடைத்தாளில் தரப்பட்டுள்ள வினா இலக்கத்திற்கு முன்னால் எழுதுக.

(vii) படப் பகுதியில் நெல், தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய நான்கு பயிர்ச்செய்கைகளும் பரம்பிக் காணப்படுகின்றன. (01 புள்ளி)

(viii) படப் பகுதியிலுள்ள பிரதான ஆறு வடக்கு எல்லையில் தோன்றி தென்-கிழக்கு எல்லை நோக்கிப் பாய்கின்றது. (01 புள்ளி)

(ix) படப் பகுதியில் A09 பெருந்தெருவின் Ⓧ அமைவிடத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் பயணத்தை ஆரம்பிக்கும் ஒருவர் Ⓨ அமைவிடத்தைச் சென்றடைகின்றார். அவர் பயணித்த மொத்தத் தூரம் 10Km ஆகும். (01 புள்ளி)

[பக். 6 ஐப் பார்க்க

(ஆ) உமக்குத் தரப்பட்டுள்ள உலகப் படத்தினைக் கவனமாக அவதானித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக உலகப் படத்தின் அருகே தரப்பட்டுள்ள கூட்டினைப் (பக்க இல. 9) பயன்படுத்துக.

- (i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைக் குறிக்கும் எழுத்தை உலகப் படத்திலிருந்து தெரிவுசெய்து படத்தின் அருகிலுள்ள உரிய கூட்டினுள் எழுதுக.

(i) யமேக்கா தீவு - Ⓐ, Ⓑ, Ⓒ
(ii) பம்பாஸ் புல்நிலம் - Ⓓ, Ⓔ, Ⓕ
(iii) நைஜீரியா - Ⓖ, Ⓗ, Ⓘ
(iv) சிட்னி நகரம் - Ⓙ, Ⓚ, Ⓛ
(v) கம்சட்கா குடாநாடு - Ⓡ, Ⓢ, Ⓣ (05 புள்ளிகள்)

(இ) உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினைக் கவனமாக அவதானித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக இலங்கைப் படத்தின் அருகே தரப்பட்டுள்ள கூட்டினைப் (பக்க இல. 9) பயன்படுத்துக.

- (i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைக் குறிக்கும் எழுத்தைப் படத்திலிருந்து தெரிவுசெய்து அருகிலுள்ள உரிய கூட்டினுள் எழுதுக.

(i) மடுவீதிப் புகலிடம் - Ⓐ, Ⓑ, Ⓒ
(ii) நிலாவெளி - Ⓓ, Ⓔ, Ⓕ
(iii) மட்டக்களப்பு - Ⓖ, Ⓗ, Ⓘ
(iv) நில்வள ஆறு - Ⓙ, Ⓚ, Ⓛ
(v) ஹோட்டன் சமவெளி - Ⓡ, Ⓢ, Ⓣ (05 புள்ளிகள்)

## பகுதி II

**2.** (i) புவி அமைப்பின் இரண்டு பிரதான படைகள் ஒவ்வொன்றுக்கும் சிறிய விவரணம் கீழே (a) மற்றும் (b) இல் தரப்பட்டுள்ளது.

(a) புவியின் உட்பாகத்தில் அமைந்துள்ளது. திரவ மற்றும் திண்ம உலோகங்களின் சேர்க்கையைக் கொண்டுள்ளது.

(b) பயனுள்ள கனியங்களைக் கொண்டுள்ளது. கண்டப் பகுதிகளில் இப்படையின் ஆழம் 60 கிலோமீற்றரையும் சமுத்திரப் பகுதிகளில் 5 கிலோமீற்றரையும் கொண்டுள்ளது.

(a) மற்றும் (b) இல் உள்ள **இரண்டு** படைகளையும் ஒழுங்குமுறையில் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) கற்கோளத்தில் காணப்படும் பெரிய புவித்தகடுகள் **மூன்றினைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iii) கற்கோளத்துக்கும் புவியின் உட் பாகத்துக்கும் இடையில் ஏற்படும் இடைத்தாக்கத்தினால், மனித நடவடிக்கைகளுக்கு சாதகமற்ற பாதிப்புகளை ஏற்படுத்தும் நிகழ்வுகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் ஏதேனுமொரு நிகழ்வு பற்றி விளக்குக. (05 புள்ளிகள்)

**3.** (i) பெருந்தோட்ட விவசாயத்தின் விசேடமான அம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கையில் பிரதான பயிர்கள் தற்போது எதிர்நோக்கும் மூன்று பிரச்சினைகள் கீழே (a), (b), (c) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு பிரச்சினையினாலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள பிரதான பயிர் எதுவென (a), (b), (c) ஒழுங்கில் குறிப்பிடுக.

(a) நிலம் துண்டாடப்பட்டு விற்பனை செய்யப்படுதல்
(b) நில மீட்பு மற்றும் பிற நோக்கங்களுக்கு நிலத்தினைப் பயன்படுத்தல்
(c) சர்வதேச சந்தைக்கு தரம் குறைந்த உற்பத்திகளை அறிமுகப்படுத்துதல் (03 புள்ளிகள்)

(iii) இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் விவசாயம் முக்கியத்துவத்தினைக் கொண்டிருப்பதற்கான **மூன்று** காரணங்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஏதாவது ஒன்றின் முக்கியத்துவத்தினை விளக்குக. (05 புள்ளிகள்)

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**4.** (i) A - 23 1/2 ° வடக்கு அகலக்கோடு மற்றும் 23 1/2 ° தெற்கு அகலக்கோடு

B - 23 1/2 ° வடக்கு அகலக்கோடு மற்றும் 66 1/2 ° வடக்கு அகலக்கோடு

மேலே A,B ஒழுங்கில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு அகலக்கோட்டு வலயங்களுக்கும் இடையில் பரம்பிக் காணப்படும் **இரண்டு** பிரதான காலநிலை வலயங்களை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (a) மேலே (i) இல் குறிப்பிட்ட B காலநிலை வலயத்துக்கு இடையில் பரம்பிக் காணப்படும் காட்டு வகையினைக் குறிப்பிடுக.

(b) இக்காடுகளின் **இரண்டு** விசேடமான அம்சங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) காடுகள் அழிக்கப்படுவதனால் பூகோளக் காலநிலை மாற்றத்தில் எவ்வாறான விளைவுகள் ஏற்படுமென்பதனை எடுத்துக் காட்டும் **மூன்று** காரணிகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றினைச் சுருக்கமாக விவரிக்குக. (05 புள்ளிகள்)

**5.** (i) தற்போது கப்பல் கட்டும் கைத்தொழிலுக்கு முக்கியத்துவம் பெற்று விளங்கும் **இரண்டு** ஆசிய நாடுகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) கப்பல் போக்குவரத்து முக்கியமான போக்குவரத்து முறையாக விளங்குவதற்கான **மூன்று** காரணங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) இலங்கையில் 'பெற்றோ-இரசாயனக் கைத்தொழிலை' விருத்தி செய்வதனால் ஏற்படும் **இரண்டு** நன்மைகளையும் **ஒரு** தீமையையும் உதாரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

**6.** (i) இலங்கையின் அபிவிருத்தியில் அண்மைய காலங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்ட **இரண்டு** அபிவிருத்திச் செயற்றிட்டங்களினைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) நிலைபேண் அபிவிருத்தி தொடர்பாக உலகின் கவனத்தை ஈர்த்த **மூன்று** காரணங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) அபிவிருத்திச் செயன்முறையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய **மூன்று** நன்மைகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றினை விளக்குக. (05 புள்ளிகள்)

**7.** (i) இலங்கையில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்கள் **இரண்டினைக்** பெயரிடுக. (02 புள்ளிகள்)


(ii) புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களைப் பயன்படுத்துவதனால் கிடைக்கும் **மூன்று** நன்மைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் பயன்பாட்டினை விரிவாக்குவதற்கு இலங்கையில் அரச மற்றும் தனியார் துறையினரினால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை விளக்குக. (05 புள்ளிகள்)

**8.** (i) இலங்கைக்கு அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் எந்த **இரண்டு** நாடுகளில் இருந்து வருகின்றனர் என்பதனைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) அருகில் உள்ள படத்தில் Ⓐ, Ⓑ, Ⓒ ஆகியவற்றினால் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுலா வலயங்கள் **மூன்றையும்** ஒழுங்கு முறையில் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) இலங்கையில் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு எடுக்கத்தக்க **மூன்று** நடவடிக்கைகளை உதாரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)




❊❊❊

[பக். 8 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව/இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்/Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025 (2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025 (2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025 (2026)

විභාග අංකය / சுட்டெண் / Index Number ....................................

25879

(61) භූගෝල විද්‍යාව II
புவியியல் II
**Geography II**

පරීක්ෂකවරයාගේ ප්‍රයෝජනය පිණිසයි. / பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் / For Examiner's Use Only

1. (අ) /(அ) /(a)

(i) ....................................................................................

(ii) ....................................................................................

(iii) ....................................................................................

(iv) ....................................................................................

(v) ....................................................................................

(vi) ....................................................................................

....................................................................................

(vii) ....................................................................................

(viii) ....................................................................................

(ix) ....................................................................................

10


PAST PAPERS WIKI



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

මෙතැනින් වෙන් කරන්න/ இங்கே வேறாக்கவும்/ Detach here

(ආ) /(ஆ) /(b)




(i) 

(ii) 


(iii) 

(iv) 

(v) 

/5

(ඉ) /(இ) /(c)




(i) 

(ii) 

(iii) 

(iv) 

(v) 

/5

පරීක්ෂකවරයාගේ ප්‍රයෝජනය පිණිසයි. பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும். For Examiner's Use Only.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | (අ) (அ) (a) /10 | (ආ) (ஆ) (b) /5 | (ඉ) (இ) (c) /5 | = /20 |

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**61 II**

25955

# අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025 (2026)
# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025 (2026)
# General Certificate of Education (Ord. Level) Examination, 2025 (2026)

## භූගෝල විද්‍යාව II / புவியியல் II / Geography II

උත්තර පත්‍ර පරීක්ෂකවරුන්ගේ ප්‍රයෝජනය සඳහා පමණි




SCALE : 1 : 50,000

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න